# இராசிபுரம் நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்ட அறிவிப்பு

2023–ஆம் வருடம் ஜனவரி மாதம் 24–ஆம் தேதி செவ்வாய் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு இராசிபுரம் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் ஒன்று நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் கீழ்க்கண்டப் பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

இராசிபுரம் நகராட்சி
நாள் : 20.01.2023

தலைவர்,
நகர் மன்றம்.

## பொருள்கள்

(1) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட திருவள்ளுவர் தெருவில் புதியதாக வணிக வளாகம் (Commercial Complex) கட்ட ரூ. 300.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்க்காணும் பணிக்கு, நகராட்சி நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு ரூ. 300.00 இலட்சம் மதிப்பீட்டிலான வணிக வளாகம் கட்டுதல் பணிக்கு முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி கோர நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மேற்கண்டப் பணிக்கு நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4369/22/இ1)**

**தீர்மானம் எண். 242**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் (நகரம்) 2.0 (SBM Urban 2.0) திட்டத்தின்கீழ் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். 22083/ 2022/SBM2, நாள் 13.12.2022 ரூ. 26.00 இலட்சம் மதிப்பீட்டில் பொருள் மீட்பு மையம் (Material recovery facility) (நிதி பங்கீட்டில் – மத்திய அரசு ரூ. 13.00 இலட்சம் மற்றும் மாநில அரசு ரூ. 8.00 இலட்சம், நகராட்சிப் பங்குத் தொகை ரூ. 5.00 இலட்சம்) மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்க்கண்ட நிதி பங்கீட்டின்படி, நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பொருள் மீட்பு மையம் (Material recovery facility) அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டதற்கு மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பொருள் மீட்பு மையம் (Material recovery facility) அமைக்கும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களுக்கு அனுப்பப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(4617/22/இ1)**

**தீர்மானம் எண். 243**

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

(3) அரசாணை (நிலை) எண். 174, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5(1)) துறை, நாள் 14.12.2022–இல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் கட்டுப்பாட்டிலுள்ள பாழடைந்த கட்டடங்களை இடிப்பதற்கு வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்க்காணும் அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(4671/22/இ1)**

**தீர்மானம் எண். 244**

பதிவு செய்யப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சியில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் விற்பனை செய்யப்படும் உணவுப் பொருட்களுக்கான காசு வில்லைகளை அச்சடித்தர உள்ளூர் அச்சகதாரர்களிடம் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) பாலமுருகன் பிரஸ், இராசிபுரம் – 2000 எண்ணிக்கையிலான புத்தகம் ஒன்றிற்கு– ரூ. 360/–
2) வெண்ணிலா அச்சகம், இராசிபுரம்– 2000 எண்ணிக்கையிலான புத்தகம் ஒன்றிற்கு– ரூ. 340/–
3) பரணி பிரிண்டர்ஸ், இராசிபுரம் – 2000 எண்ணிக்கையிலான புத்தகம் ஒன்றிற்கு– ரூ. 320/–

மேற்படி வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியான ரூ. 320/– கொடுத்துள்ள பரணி பிரிண்டர்ஸ் என்பவரது விலைப்புள்ளியினை ஏற்கலாம். மன்ற அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) குறைந்த விலைப்புள்ளிக் கொடுத்துள்ள பரணி பிரிண்டர்ஸ் அவர்களுக்கு 150 புத்தகங்கள் அச்சடித்துதர பணியாணை வழங்கியதையும் அதற்கான செலவுத் தொகை ரூ. 48000/–ஐ வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(3652/14/சி4)**

**தீர்மானம் எண். 245**

அனுமதிக்கப்பட்டது.

(5) இந்நகராட்சி உள்ளாட்சித் தணிக்கை 2021–22 நடைபெற்று, தட்டச்சு செய்தல், நகல் எடுத்தல், பையிண்டிங் செய்தல் மற்றும் இதர செலவுகள் சேர்த்து தொகை ரூ. 20950/–ஐ திரு அ. நிலவழகன், இளநிலை உதவியாளர் தன்னால் செலவு செய்யப்பட்டுள்ளதால், அத்தொகையை தனக்கு திரும்ப வழங்க கோரியுள்ளார். மேற்படித் தொகையை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படித் தொகை ரூ. 20950/–ஐ திரு அ. நிலவழகன், இளநிலை உதவியாளர் அவர்களுக்கு, நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**(34/22/பி1)**

**தீர்மானம் எண். 246**

அனுமதிக்கப்பட்டது.

**(6)** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு SBM 2.0 திட்டத்தின்கீழ் திறந்தவெளி கழிப்பிடமில்லா (odf) நகராகவும் மற்றும் குப்பையில்லா நகரமாகவும் (GFC3 Star) தகுதி பெறுவதற்கு நாளிதழில் விளம்பரம் செய்ய அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் .

**(4471/22/எப்1)**

**தீர்மானம் எண். 247**

அனுமதிக்கப்பட்டது.

**(7)** இராசிபுரம் நகராட்சியில் **2022–2023–**ஆம் ஆண்டு சாலையோர வியாபாரிகள் (Street Vendors) ஒப்பந்தப்புள்ளிக் கோரும் விளம்பரத்திற்கு (Tender) கணக்கெடுப்புப் பணிக்கு நாளிதழில் விளம்பரம் செய்ய அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்தது Flame Advertising Pvt Ltd. Chennai அவர்களுக்கு தொகை ரூ. 6032/-ம் வழங்க மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(1434/16/எச்1)**

**தீர்மானம் எண். 248**

அனுமதிக்கப்பட்டது.

**(8)** இராசிபுரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணியை மேற்கொண்டு வரும் Relyon Facility Services PVT Ltd., Chennai நிறுவனத்திற்கு **30.11.2022–**இல் ஒப்பந்த பணிக்காலம் முடிவடைவதால் மேலும், ஜனவரி **2023** ஒரு மாத காலத்திற்கு பணி நீடிப்பு ஆணை நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம் .

**(2293/19/எச்1)**

**தீர்மானம் எண். 249**

அனுமதிக்கப்பட்டது.

**(9)** சேலம், நகராட்சி நிர்வாக மண்டலத்திற்குட்பட்ட நகராட்சிகளில் **2022–23–**ஆம் ஆண்டிற்கு நகராட்சி கட்டுப்பாட்டில் இயங்கும் நகராட்சி துவக்கப்பள்ளி, நகராட்சி நடுநிலைப் பள்ளி மாணவ, மாணவியர்கள் அறிவுத்திறணையும், வாசிப்பு திறணையும் மேம்படுத்தும் வகையில் குறைந்த சலுகை விலையில் தினகரன் பதிப்பகம், சேலம் அவர்கள் தினகரன் நாளிதழில் விநியாகம் செய்ய கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். அதன்படி, நகராட்சிப் பள்ளிகள் கீழ்க்கண்டவாறு பட்டியலில் உள்ளபடி தினகரன் நாளிதழில் விநியோகம் செய்ய

1) நகராட்சி நடுநிலைப் பள்ளி, பாரதிதாசன் சாலை
2) நகராட்சி நடுநிலைப் பள்ளி, வி. நகர்
3) நகராட்சி துவக்கப்பள்ளி, பாச்சி தெரு
4) நகராட்சி துவக்கப்பள்ளி, அண்ணாசாலை
5) நகராட்சி துவக்கப்பள்ளி, ரங்கப்பன் சந்து
6) நகராட்சி துவக்கப்பள்ளி, சுப்பராய தெரு
7) நகராட்சி நடுநிலைப் பள்ளி, காட்டூர்

இராசிபுரம் நகராட்சி கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் பள்ளிகளுக்கு தினசரி நாளிதழ் தினகரன் விநியோகம் செய்வதற்கும் அதற்குண்டான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) கல்வி நிதியிலிருந்து செலவினத் தொகை வழங்கலாம்.

**(219/23/அ5)**

**தீர்மானம் எண். 250**

அனுமதிக்கப்பட்டது.

**( 10 )** இராசிபுரம் நகராட்சி வார்டு எண். **25**, கோனேரிப்பட்டி எக்ஸ்டன்சன் நெ. **1** குடிநீர் விநியோக பகிர்மானக் குழாய் மற்றும் ஆழ்துளைக் கிணற்று உப்புநீர் வசதி செய்தல் பணி அவசர அவசியம் கருதி section 15-இன்கீழ் மன்றத் தலைவரிடம் **05.09.2022**–ஆம் தேதியில் முன் அனுமதி பெற்று மதிப்பீடு ரூ. **360000/–**க்கு அனுமதி பெறப்பட்டது. இதன் பின்னர் மதிப்பீட்டில், மதிப்பீட்டிலிருந்து **0.25%** குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு செல்லப்பன், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணியாணை **09.09.2022**–இல் வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டு **05.12.2022**–இல் தொகை வழங்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொண்டதற்கும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2646/22/இ2)**

**தீர்மானம் எண். 251**

பதிவு செய்யப்பட்டது.

**( 11 )** இராசிபுரம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (TURIP) **2022–23** திட்டத்தின்கீழ் நகர் மன்றத் தீர்மானம் எண். **201**, நாள் **25.11.2022**–இன்படி **13901.00** மீட்டர் கொண்ட **131** தார் மற்றும் கான்கிரீட் சாலைகள் அமைக்கும் ரூ. **977.67** மதிப்பீட்டு பணிகளுக்கான முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. அதன்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களது கடிதம் ந.க.எண். **248226/2022**/எஸ்எஸ்**1**, நாள் **26.12.2022**–இல் முன்மொழிவுகள் அனுப்பப்பட்ட **13901.00** மீட்டர் நீளமுள்ள தார் மற்றும் கான்கிரீட் சாலைகள் அமைக்க திருத்திய மதிப்பீடான ரூ. **941.16** இலட்சத்திற்கு முழு மானியமாக அனுமதித்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் பதிவு செய்யலாம்.

**(3908/2022/இ1)**

**தீர்மானம் எண். 252**

பதிவு செய்யப்பட்டது.

**( 12 )** இராசிபுரம் நகராட்சி – தமிழகத்தில் தமிழர்களின் வளர்ச்சிக்காக அரும்பெரும் தொண்டாற்றிவரும் தமிழகத்தின் முன்னாள் கல்வி அமைச்சராக இருந்த பேராசிரியர் அவர்களது திருவுருவப்படத்தை அவர்களது நூற்றாண்டு விழா கொண்டாடப்படுவதை தொடர்ந்து இராசிபுரம் நகர்மன்ற கூட்ட அரங்கில் பேராசிரியர் திருமிகு க. அன்பழகன் அவர்களது திருவுருவப்படத்தை வைக்க நகர்மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(072/2023/எப்1)**

**தீர்மானம் எண். 253**

அனுமதிக்கப்பட்டது.

**( 13 )** இராசிபுரம் நகராட்சி – வார்டு–எ, பிளாக்–**1**, நகர புல லண். **10/3**, **10/5** இந்த புல எண்களிலுள்ள**1.01** ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நாமக்கல், மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் இணையதள ந.க.எண். NKL/QWWFD6FP/4049/2/2022/TCP–இன்படி மேற்க்கண்ட மனைப்பிரிவிற்கு Approval No. SWP/DTCP/Namakkal Layout No. 199/2022 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்க்கண்ட மனைப்பிரிவில் **19** மனைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள மனுதாரரால் தானமாக வழங்கப்பட்ட சாலையின் பரப்பு **1463.93** ச.மீ. மின் பகிர்மானம் பரப்பு **20.54** ச.மீ. பொது ஒதுக்கீடு மனையின் பரப்பு **29.86** ச.மீ. மேற்க்கண்ட சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை மனைப்பிரிவின் உரிமையாளர் தானப்பத்திரம் மூலம் நகராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். (தான பத்திர எண். **6761/2022**) இதன் விவரங்கள் மன்றத்தில் பதிவு செய்ய ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. மனுதாரர் உரிய கட்டணங்களை செலுத்தியப் பின் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(3866/22/எப்1)**

**தீர்மானம் எண். 254**

அனுமதிக்கப்பட்டது.

**( 14 )** இராசிபுரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைப் பணியை மேற்க்கொண்டு வரும் Relyon Facility Service Private Limited, Chennai நிறுவனத்திற்கு **31.01.2023**–ஆம் தேதியுடன் ஒப்பந்த பணிக்காலம் முடிவடைவதால் மேலும் பிப்ரவரி **2023** ஒரு மாத காலத்திற்கு பணி நீடிப்பு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(2293/19/எச்1)**

**தீர்மானம் எண். 255**

அனுமதிக்கப்பட்டது.

**( 15 )** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் லாரி TN 28 AS 0104-இல் தகுதிச்சான்று புதுப்பிக்க சுவராஜ் மஸ்தா

ஷோரூமில் பழுது நீக்கம் செய்யும் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கு ஏற்படும் உத்தேச செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(4512/22/எச்1)**

**தீர்மானம் எண். 256**

அனுமதிக்கப்பட்டது.

**( 16 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மலேரியாப் பிரிவிற்கு, தற்போது மலேரியா, டெங்கு நோய்கள் பரவலை கட்டுப்படுத்துவதற்காக DBC பணிக்கு மகளிர் சுய உதவிக் குழுக்களிலுள்ள **50** நபர்களை ஜனவரி **2023** முதல் **6** (ஆறு) மாத காலத்திற்கு பணியமர்த்திக் கொள்ள நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்க்கொண்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(1550/18/எச்1)**

**தீர்மானம் எண். 257**

அனுமதிக்கப்பட்டது.

**( 17 )** சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **10.01.2023**–ஆம் தேதிய செயல்முறை ஆணை எண். **34638/2022**/EA-2-SWM-7-இன் ஆணையில் இராசிபுரம் நகராட்சிப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளின்கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான பணியாளர்கள், தளவாட சாமான்கள் மற்றும் வாகனங்களை பயன்படுத்தி மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கி இதனை இந்நகராட்சியில் குறிப்பிடும் உரமாக்கும் மையம் (MCC) மறு சுழற்சி மையம் (RRC) மற்றும் கழிவு வளம் மீட்பு மையம் (MRF) ஆகிய இடங்களுக்கு கொண்டுவர ஒரு டன்னிற்கு ரூ. **4724.87** என நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின்படி மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளிக்கோரி நிறுவனத்தை தேர்வு செய்து பணி மேற்க்கொள்ளவும் ஆணையிடப்பட்டுள்ளது.

இப்பணியை மேற்க்கொள்ள இராசிபுரம் நகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. **356.69** இலட்சம் செலவாகும் என்பதினால் இத்தொகையை பொது நிதி மற்றும் **15** CFC SWM Tied Grant ஆகியவற்றிலிருந்து மூன்றாண்டுகளுக்கு செலவு மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இதன் பொருட்டு ஒப்பந்த நிறுவனத்தை மூன்றாண்டுகளுக்கு தேர்வு செய்திட ஒப்பந்தப்புள்ளிக் கோரவும் மற்றும் இதற்கான செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(3899/22/எச்1)**

**தீர்மானம் எண். 258**

அனுமதிக்கப்பட்டது.

**( 18 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட காட்டூர் சாலையில் அமைந்துள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியின் கட்டடங்களின் AC Sheet மேற்க்கூரையை அகற்றிவிட்டு புதியதாக மேல்தளம் அமைத்தல் மற்றும் வகுப்பறைகளுக்கு டைல்ஸ் மற்றும் வர்ணம் பூசும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. **17.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்குமாறு மன்றத்திடம்

வேண்டப்படுகின்றது. மேற்க்காணும் பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம். மேற்க்காணும் பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(393/2023/இ1)**

**தீர்மானம் எண். 259**

அனுமதிக்கப்பட்டது.

**( 19 )** இராசிபுரம் நகராட்சிக்கு NUHM 2022-23 திட்டத்தின்கீழ் புதியதாக நகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட ரூ. **120.00** இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, நகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட Structural Design அறிக்கை Coimbatore Institute of Technology, Coimbatore அவர்களிடமிருந்து வாங்க வேண்டியுள்ளது. மேற்க்காணும் பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ. **0.60** ஆயிரமாகும். பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்க்கண்ட பணியின் அவரச அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2695/21/இ1)**

**தீர்மானம் எண். 260**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**( 20 )** இராசிபுரம் நகராட்சிக்கு NUHM 2022-23 திட்டத்தின்கீழ் புதியதாக நகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட ரூ.**120.00** இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, நகர ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட Geo Technical Investigation அறிக்கை Coimbatore Institute of Technology, Coimbatore அவர்களிடம் பெறப்பட வேண்டியுள்ளது. மேற்க்காணும் பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ. **1.20** இலட்சமாகும். பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்க்கண்ட பணியின் அவரச அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அங்கீகாரம் வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்க்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(2695/21/இ1)**

**தீர்மானம் எண். 261**

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**(21)** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பொறியியல் பிரிவில் TURIP, KNMT, NUHM, 15th CFC, SUIDF திட்டப்பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளுக்கு கலர்

புகைப்படங்கள் சமர்பிக்கப்பட வேண்டியுள்ளதால் புதியதாக கலர் பிரிண்டர் தேவைப்படுகிறது. எனவே, பொறியியல் பிரிவிற்கு புதியதாக கலர் பிரிண்டர் ரூ. 30,000/– மதிப்பீட்டில் வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்க்காணும் பணியினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம். மேற்க்காணும் பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(396/23/இ1)**

**தீர்மானம் எண். 262**

அனுமதிக்கப்பட்டது.

( 22 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட செம்மலைத் தெருவில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியின் கட்டடங்களின் பழுதடைந்த மேற்க்கூரையை அகற்றிவிட்டு புதியதாக மேல்தளம் அமைத்தல் மற்றும் வகுப்பறைகளுக்கு டைல்ஸ் மற்றும் வர்ணம் பூசும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 14.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்குமாறு மன்றத்திடம் வேண்டப்படுகின்றது. மேற்க்காணும் பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதி வழங்கலாம். மேற்க்காணும் பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(394/23/இ1)**

**தீர்மானம் எண். 263**

அனுமதிக்கப்பட்டது.

( 23 ) இராசிபுரம் நகராட்சி வருவாய் பிரிவில் பணிபுரியும் வருவாய் ஆய்வர் மற்றும் வருவாய் உதவியாளர்களுக்கு அன்றாட அலுவலக பணிபுரிய இரு கணினி மற்றும் இரு பிரிண்டர் வாங்க ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 2.05 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(399/23/இ1)**

**தீர்மானம் எண். 264**

அனுமதிக்கப்பட்டது.

( 24 ) இராசிபுரம் நகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு பணி மேற்க்கொள்ள ஏதுவாக இரு கணினி மற்றும் ஒரு பிரிண்டர் வாங்க ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 1.65 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. மேற்க்காணும் பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(400/23/இ1)

**தீர்மானம் எண். 265**

அனுமதிக்கப்பட்டது.

( 25 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தற்போது 4.00 MLD குடிநீர் TWAD மூலமாக பெறப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது குடிநீரை Gas Chlorination செய்வது அவசியமாகிறது. மேலும், குடிநீரின் தரத்தை மேம்படுத்த இப்பணி அவசியமாகிறது. இந்த பணிக்கான மதிப்பீடு ரூ. 9.98 இலட்சமாகும். மேற்க்கண்ட பணி மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்டப் பணிகள் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(401/23/இ2)

**தீர்மானம் எண். 266**

அனுமதிக்கப்பட்டது.

( 26 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு தற்போது 4.00 MLD குடிநீர் TWAD மூலமாக தரப்பட்டு வருகிறது. தற்போது Gas Chlorination சிறு அளவு தேவைப்படுகிறது. இதற்கான அறை கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்ட பணிக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(402/23/இ2)

**தீர்மானம் எண். 267**

அனுமதிக்கப்பட்டது.

( 27 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட இரங்கப்பன் தெருவில் அமைந்துள்ள நகராட்சி தொடக்கப்பள்ளியின் கட்டடங்களின் AC Sheet மேற்கூரையை அகற்றிவிட்டு புதியதாக மேல்தளம் அமைத்தல் மற்றும் வகுப்பறைகளுக்கு டைல்ஸ் மற்றும் வர்ணம் பூசும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 15.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்குமாறு மன்றத்திடம் வேண்டப்படுகின்றது. மேற்க்காணும் பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

அலுவலகக்குறிப்பு :

மன்றம் அனுமதி வழங்கலாம். மேற்காணும் பணியினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(395/23/இ1)

**தீர்மானம் எண். 268**

அனுமதிக்கப்பட்டது.

( 28 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 4 மற்றும் வார்டு எண். 10–இல் எல்லப்பா தெரு 1, 2 வி. நகர் ரோடு எண். 6 மேலும் வார்டு எண். 15–இல் தியாகராஜ சுவாமி கோவில் தெருவில் பொது மக்களுக்கு ஆழ்துளைக் கிணற்று நீர் பைப்லைன் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்யும் பணிக்கு மதீப்பிடு ரூ. 2,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(119/23/இ2)

**தீர்மானம் எண். 269**

அனுமதிக்கப்பட்டது.

( 29 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக சாலையமைக்க KNMT 2022-23 திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தற்போது பணிகள் ஆரம்பிக்கும் நிலையிலுள்ளது. மேற்க்கண்ட சாலையில் ஐயப்பன் கோவில் தெரு, நைனாமலை லே அவுட், காலனித்தெரு 1, 2 மற்றும் காந்தி நகர் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் இல்லாததால் சாலையமைக்கும் பணி நடப்பதற்கு முன் பாதாள சாக்கடை பணி செய்வது அவசியமாகிறது. மேற்க்கண்ட பாதாள சாக்கடை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள மதீப்பீட்டுத் தொகை ரூ.13.00/–இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்ட பணிகளுக்கான செலவினம் பாதாள சாக்கடைத் திட்ட நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். மேலும் நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

( 424/23/இ2)

**தீர்மானம் எண். 270**

அனுமதிக்கப்பட்டது.

( 30 ) இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக KNMT 2022-23 திட்டத்தின்கீழ் சாலை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து தற்போது பணிகள் ஆரம்பிக்கும் நிலையிலுள்ளது. மேற்க்கண்ட சாலையில் இராமசாமி தோட்டம், இராமசாமி தெரு மெயின் ரோடு 2, 3, 4 ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாத காரணத்தால் அப்பகுதியில் கழிவு நீர் வடிகாலில் கழிவு நீர் செல்கின்றன. எனவே மேற்க்கண்ட பகுதிகளில் சாலை அமைக்கும் முன்பாக பாதாள சாக்கடை பணி செய்வது அவசியமாகிறது. மேற்க்கண்ட பணிக்காக தயாரிக்கப்பட்ட மதீப்பிடு ரூ. 13.50/–இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்ட பணிகளுக்கான செலவினம் பாதாள சாக்கடைத் திட்ட நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். மேலும் நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(423/23/இ2)

**தீர்மானம் எண். 271**

அனுமதிக்கப்பட்டது.

( 31 ) இராசிபுரம் நகராட்சி முகப்பில் தமிழர்களின் கலாச்சாரம் மற்றும் பெருமைகளை பறை சாற்றும் வகையிலும், எதிர்காலத்தில் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையிலும் நகராட்சி முகப்பில் ''தமிழ்நாடு வாழ்க'' என்ற வாசகத்துடன் விளம்பர பதாகை நிரந்தரமாக நிறுவ நகர்மன்றத் தலைவர் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மேற்க்கண்ட பதாகை அமைக்க உண்டான உத்தேச செலவு பட்டியல் C-Cloud நிறுவனத்தினருக்கு ரூ. 58000/–ற்கு அளிக்கப்பட்டுள்ளது. மேற்க்கண்ட செலவிற்கு நகர் மன்ற ஒப்புதல் நோக்கி மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(410/23/எப்1)

**தீர்மானம் எண். 272**

அனுமதிக்கப்பட்டது.

( 32 ) செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் மற்றும் அலுவலர் அரசு துணை செயலாளர் அவர்களின் நேர்முகக் கடிதத்தின்படி அரசின் முக்கிய திட்டங்களை விளம்பரங்களாக வடிவமைத்து அனைத்து மாவட்டங்களிலும் அனுமதி பெற்ற இடங்களில் திறந்தவெளி விளம்பரம் Open Space Advertisement மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், இதனடிப்படையில் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட முத்தான திட்டங்களான மகளீருக்கான " இலவச பேருந்து பயணத் திட்டம் மற்றும் புதுமைப்பெண் திட்டம் ஆகிய திட்டங்களின் வடிவமைப்புகளை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும், இதனடிப்படையில் இராசிபுரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் மேற்க்கண்ட வடிவமைப்புகளை பதிவிறக்கம் செய்து அமைக்கும்படி நாமக்கல், மாவட்ட ஆட்சித் தலைவர் தமது ந.க.எண். 382/செ.ம.தொ.ஆ/2022 நாள் 16.12.2022–இல் தெரிவித்துள்ளார். மேலும், அரசால் அவ்வப்போது அனுப்பப்படும் விளம்பர வடிவமைப்புகள் தொடர்ந்து பதிவிறக்கம் செய்து மேற்க்கண்ட இரண்டு இடங்களில் அமைக்கும்படி நாமக்கல், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, மேற்க்கண்ட அரசு துணை செயலாளர் மற்றும் நாமக்கல், மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆணைக்கிணங்க இராசிபுரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் மற்றும் பழைய பேருந்து நிலையம் ஆகிய இரண்டு இடங்களில் 20' அடி உயரம் கொண்ட இரும்பு பைப் மூலம் விளம்பர வடிவமைப்பு அமைக்கப்பட்ட விவரம்.

1) <u>01.01.2023</u>

10' x 12' அடி அளவில்
(1) புதுமைப்பெண் திட்டம்
(2) மகளீருக்கான இலவச பயண பேருந்து திட்டம் விளம்பர வடிவமைப்பு நிறுவப்பட்டது } 27000/–

பிரிண்ட் எடுத்தது 3400/–

2) தை பொங்கலுக்கு விளம்பர வடிவமைப்பு நிறுவப்பட்ட விவரம் }

| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் விளம்பரம் பிரிண்ட் எடுத்துது | 3400/– |
| பிரிண்ட் ஒட்ட கூலி | 2000/– |
| | ------ |
| | **35800/–** |
| | ------- |

மேற்க்கண்ட செலவினங்களுக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**(409/23/எப்1)**

**தீர்மானம் எண். 273**

அனுமதிக்கப்பட்டது.

**( 33 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **1** முதல் **27** வரையுள்ள பகுதிகளுக்கு குடிநீர் வநியோக பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறு மூலம் மின்மோட்டார் இறக்கி சின்டெக்ஸ் டேங்க் வைத்து தண்ணீர் வசதி செய்யப்பட்டு வருவதால் மேற்க்கண்ட பகுதிகளில் உள்ள குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு ரூ. **4.80** இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1) | M/s. Shanmuga Electricals | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு. |
| 2) | திரு ஆர். பெரியசாமி | 0.99% மதிப்பீட்டைவிட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் M/s. Shanmuga Electricals, Salem அவர்கள் **0.03**% மதிப்பீட்டைவிட குறைவாக வழங்கியுள்ளதால் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

**1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** பணியின் அவசர அவசியம் கருதி M/s. Shanmuga Electricals, Salem அவர்களுக்கு பணியாணை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
**3)** மேற்க்கண்ட பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4445/22/இ2)**

**தீர்மானம் எண். 274**

அனுமதிக்கப்பட்டது.

**( 34 )** இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். **14** முதல் **27** வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளி கிணற்றிலுள்ள நீழ்முழ்கி மின்மோட்டார் மற்றும் சிறு மின் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்தல் பணிக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ. **4.80** இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1) | திரு ஆர். எஸ். ரங்கசாமி | 0.16% மதிப்பீட்டைவிட குறைவு. |
| 2) | திருமதி ஆர். ஷாகிதா | 5.51% மதிப்பீட்டைவிட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ஆர். எஸ். ரங்கசாமி அவர்கள் 0.16% மதிப்பீட்டைவிட குறைவாக வழங்கியுள்ளதால் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மேற்க்கண்ட பணிகள் மேற்க்கொள்ள பணியாணை வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்க்கண்ட பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4447/22/இ2)**

**தீர்மானம் எண். 275**

அனுமதிக்கப்பட்டது.

( 35 ) இராசிபுரம் நகராட்சி பகுதிகளிலுள்ள வார்டு எண். 1 முதல் 13 வரை ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளி கிணற்றிலுள்ள நீழ்முழ்கி மோட்டார் மற்றும் சிறு மின் விசைப்பம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பொதுமக்களுக்கு சின்டெக்ஸ் டேங் மூலம் தண்ணீர் வசதி செய்யும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.80 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1) | திரு ஆர். எஸ். ரங்கசாமி | 0.16% மதிப்பீட்டைவிட குறைவு. |
| 2) | திருமதி ஆர். ஷாகிதா | 5.51% மதிப்பீட்டைவிட அதிகம். |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ஆர். எஸ். ரங்கசாமி அவர்கள் 0.16% மதிப்பீட்டைவிட குறைவாக வழங்கியுள்ளதால் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்க்கண்ட பணிகள் அவசர அவசியம் கருதி பணியாணை வழங்கி பணிகள் மேற்க்கொள்ளப்பட்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
3) மேற்க்கண்ட பணிகளுக்கான செலவினம் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(4446/22/இ2)**

**தீர்மானம் எண். 276**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/— இரா. முனைவர் கவிதா சங்கர்,
நகர் மன்றத் தலைவர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்
இராசிபுரம் நகராட்சி.